<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 833/2023** **நாள்: 10.11.2025** **பி.வா.சா.1 – சரண்யா**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் வழக்கறிஞர் தயாரித்து தாக்கல் செய்துள்ளார். அதிலுள்ள விவரங்கள் சரியானவை என்றால் சரிதான். என்னுடைய வீட்டின் முகவரியில் கதவு எண்.4/269 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை படித்து பார்த்தேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விவரங்கள் எனக்கு தெரியும். வாதி இந்த வழக்கை காசோலையின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 காசோலை என்னுடைய காசோலை என்றால் சரிதான். மேற்படி காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் அல்ல. என்னிடம் காட்டப்படும் சார்வு செய்யப்பட்ட அழைப்பாணைகளில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான். என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான். எனது வழக்கறிஞருக்காக நான் வக்காலத்தில் கையொப்பம் போட்டு கொடுத்தவை தான். என்னிடம் காட்டப்படும் எதிர் வழக்குரையில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான். எனது கணவர் 28.05.2018 ல் காலமாகிவிட்டார். எனது கணவர் உயிருடன் இருக்கும் வரை வியாபாரத்தை அவர் தான் கவனித்து வந்தார். நிறுவனத்தின் வரவு செலவை எனது கணவர் தான் பார்த்து வந்தார் என்றால் சாட்சி நானும், அவரும் சேர்ந்து பார்த்து வந்தோம் என்று கூறுகிறார். எனது கணவர் காலமான பிறகு மேற்படி நிறுவனத்தை நான் தான் தொடர்ந்து நடத்தி வருகிறேன். எனது

கணவர் இறந்த ஒரு மாதத்திற்குள்ளேயே நான் மேற்படி வியாபாரத்தை தொடர்ந்து நடத்தி வந்தேன். எனது கணவர் காலமாகி ஒரு மாதத்திற்குள்ளேயே எனது கணவர் நிறுவனத்தில் வேலை பார்த்த செல்வம் வேலையை விட்டு சென்று விட்டார். விஜயலட்சுமி, ரங்கநாதன் என்பவர்கள் வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பியிருந்தார்கள் என்ற விவரத்தை என்னுடைய எதிர் வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை என்று சாட்சி கூறுகிறார். விஜயலட்சுமி, ரங்கநாதன் ஆகியோர்கள் எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். எனது கணவர் காலமான பிறகு எனது கணவர் கைவசம் வைத்திருந்த சொத்துரிமை ஆவணங்கள், வியாபாரம் சம்பந்தப்பட்ட கணக்கு வழக்கு பற்றிய ஆவணங்கள் மற்றும் காசோலைகள் திருடு போய்விட்டதாகவும் அது சம்பந்தமாக மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் 02.08.2018 அன்று ஒரு புகார் கொடுத்ததாகவும், போலிசார் விசாரணை செய்து சிவில் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தை நாடிக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள் என்ற விவரத்தை நான் என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் என்பதை காட்டுவதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கோவிந்தராஜ், கோவிந்த சாமி, செல்வம், மௌனசாமி, ரங்கநாதன் மற்றும் உடனிருந்தவர்கள் மீது புகார் கொடுத்தேன். நான் வாதி மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை, ஏனென்றால் அவரை தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதி மீது நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாருக்கும், வாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஆறுமுகம் என்பவர் என் மீது கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கைக்கும், அதை ரத்து செய்ததற்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித

சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி புகார் பணமோசடி சம்பந்தப்பட்டது, எனவே சிவில் நீதிமன்றம் மூலமாக பரிகாரம் தேடிக்கொள்ளுங்கள் என்றும், உயர்நீதிமன்றம் புகாரை ரத்து செய்துள்ளது என்றால் சரிதான். என் மீது பல்வேறு சிவில் வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலை உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றும், மேற்படி காசோலையை தற்போது வரை நீதிமன்றத்தில் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் இல்லை என்று நிரூபிப்பதற்கு நான் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் வாதியிடம் கடன் வாங்கியது உண்மை, நான் காசோலையை கொடுத்ததும் உண்மை, நான் காசோலையில் கையொப்பம் மாற்றி போட்டு பொய்யாக இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.10 16:38:23 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.